* 503 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Rajapadmapuram Colony in Tiruttani taluk ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : வீடு மனையற்ற 69 அரிசனங்களுக்கு, ராசபத்மபுரத்திலுள்ள, ச. எண். 44/1ல் உள்ள புறம்போக்கு நிலத்தில், 10–12–1974 அன்று பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன். ஆகவே, இது குறித்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு.

*504 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் தொழுப்பேடு அரிசன குடியிருப்பு பகுதியில் அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :

(அ) ஆம்.

(இ) தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு பகுதியில் அரிசனங்களுக்காக 100 வீடுகள் கட்டும் பணியைத் தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர் விடுதி.

*505 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர்கள் விடுதிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :— (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் கட்டிட வேலையை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஆலடி அருணு : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தன்னுடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினுமா செய்து விட்டதாக சட்டமன்ற விடுதியில் பேசப்படுகிறது. அது சரியான தகவலா ? அதுபற்றித் தங்களுக்கு ஏதாவது அறிக்கை வந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம் ராசினுமா குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இம்மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் தனது உறுப்பினர் பதவியை இராஜினுமா செய்து, எனக்கு 26—3—75 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம் 29—3—75 அன்று எனக்குக் கிடைத்தது. அன்னாரின் பதவி விலகல் கோரிக்கையினை இந்திய அரசியல் சட்டம் 190 (3) (பி) பிரிவின்படி, இந்தக் கடிதம் எழுதியது அவர் தாளு இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை எனக்கு இருப்பதால் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பேசியதில், அது உண்மைதான் என்று தெரிய வந்ததால், அவருடைய இராஜினுமாவை நான் ஏற்றுக்கொண்டேன் என்பதை இம் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப்படி தந்த தகவலாக இருப்ப தால் கேட்கிறேன், என்ன காரணத்தால் இராஜினுமா செய்ய நேரிட்டது, ஏதாவது ஸ்டேட்மெண்ட் தந்திருக்கிருர்களா, அதன் விபரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்படி அவர்கள் ஏதாவது காரணம் கொடுத்திருந்தாலும் அந்தக் காரணத்தை அவையிலே தெரிவிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை.